

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார், அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார். ஜி.தண்டபாணி, சா.இராச வன்னியன், பாவாடை கோவிந்தசாமி, வி.கே.வெங்கட்ராமன், ஆர்.எஸ்.எம்.தணிகைச் செல்வன், ஆனந்தி சரவணன், எம்.எஸ்.கணேஷ் குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் பண்ருட்டி நகரத்தில்,ராஜாஜி சாலையில், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செல்வ .துரைராஜ், சகோதரர் செல்வ. சுரேஷ் ஆகியோரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஹோட்டல் நித்திய பவன் உயர்தர சைவ ஏ.சி, உணவகத்தை , பண்ருட்டி நகர மன்றத் தலைவரும் , நகர தி.மு.க. செயலாளருமான க. இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் திறந்து வைத்தார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மண்டல தலைவர் டி. சண்முகம் செயலாளர் வி .வீரப்பன், பண்ருட்டி நகர திமுக பொருளாளர், நகரமன்ற உறுப்பினர், ஆர் .கே. ராமலிங்கம், நகர கழக அவைத் தலைவர் ஆர். ராஜா, மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் ஜி.கதிர்காமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சுதந்திரப் போராட்ட வீரர்

# மாவீரன் அழகு முத்துக்கோன் பிறந்தநாள் - திருவுருவச் சிலைக்கு மாலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்!

சென்னை, ஜூலை. 11-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச்சிலைக்கு இன்று (11.7.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த நாளான இன்று (11.7.2025 -வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை, எழும்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ள கட்டாலங்குளத்தில் முத்துக்கோன் - பாக்கியத்தாய் அம்மாள் தம்பதியரின் மகனாக 11.7.1710 அன்று பிறந்தார். இவர் ஜெக வீரராம எட்டப்பநாயக்கரின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்தார்.

நெல்லைச் சீமையிலுள்ள அனைத்துப் பாளையக்காரர்களிடமும் நேரடியாக வரிவசூலித்த ஆங்கிலேயர்கள், 1755 ஆம் ஆண்டு எட்டையபுரத்திற்கும் வரிகேட்டு ஓலை அனுப்பினர். இதனை எதிர்த்து, ஆங்கிலேயர்களுக்கு நாம் ஏன் வரி தர வேண்டும் என்று எட்டையபுரம் மன்னரிடம் மாவீரன் அழகுமுத்துக்கோன் கடுமையாக வாதிட்டதன் விளைவாக, மன்னரும் அழகு முத்துக்கோனின் உணர்வினை ஏற்றுக்கொண்டார்.

எட்டப்ப மன்னர் ஆங்கிலேயருக்கு வரிகட்ட மறுத்ததால், ஆங்கிலேயர்கள் 1756 ஆம் ஆண்டு கான்சாகிப் என்பவரை நெல்லைச் சீமைக்குக் கமாண்டராக நியமித்தனர். கமாண்டர் கான்சாகிப்பின் பீரங்கிப் படையானது எட்டயபுரத்தைத் தாக்கியதையடுத்து எட்டயபுரம் ஆங்கிலேயரின் வசமானது.

எட்டையபுரத்தை மீட்டெடுக்க மாவேலி ஓடை, பெத்தநாயக்கனூர் பகுதியிலிருந்த வீரர்களைத் தமது படையில் சேர்த்து, அவர்களுக்குப் போதிய போர்ப் பயிற்சி அளித்து, இரண்டு பெரிய படைகளை உருவாக்கினார். வெங்கடேஸ்வர எட்டப்பர், அழகு முத்துக்கோன் ஆகிய இருவரது தலைமையிலும் வீரர்கள் போரில் ஈடுபட்டனர்.

1759 ஆம் ஆண்டில் மாவீரன் அழகுமுத்துக்கோன் தலைமையேற்ற படை பெத்தநாயக்கனூர் கோட்டையில் இரவில் தங்கியது. இதை உளவு மூலம் அறிந்த நெல்லைச் சீமையின் கமாண்டர் கான்சாகிப் 200-க்கும் மேற்பட்ட வீரர்களுடன் இருந்த அழகுமுத்துக்கோன் படையினர் மீது திடீர் தாக்குதல் நடத்தி, சிறை பிடித்தனர். மன்னிப்புக் கேட்டால் உயிர்ப்பிச்சை தருவதாக ஆங்கிலேயர்கள் தெரிவித்தனர். “அடிமைப்பட்டு உயிர் வாழ்வதைவிட சுதந்திர மனிதனாய் உயிர்விடுவோம்” என்று வீரன் அழகுமுத்துக்கோன் கம்பீரமாக முழக்கமிட்டார். மாவீரன் அழகு முத்துக்கோனுடன் இருந்த ஏழு வீரர்களையும் பீரங்கி வாயில் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்றனர். இந்தக் கொடூரச் சம்பவத்தின் மூலம் விடுதலைக்கான விதை தமிழகத்தில் முளைவிடத் தொடங்கியது.

விடுதலைக்கு வித்திட்ட சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் வரலாறு, வீரம், தியாகம் போன்றவற்றை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில், அன்னாரின் பிறந்த நாளான ஜூலை 11 அன்று ஆண்டு தோறும் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்று (11.7.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் எழும்பூர் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

### நாமக்கல் மாவட்டத்தில்

# 2099 பயனாளிகளுக்கு ரூ. 40.86 கோடியில் நல உதவிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

நாமக்கல், ஜூலை 11-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.7.2025) நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 11.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 39 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 89.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 141 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2,099 பயனாளிகளுக்கு 40.86 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 40.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கீரம்பூர் வருவாய் ஆய்வாளர் அலுவலக கட்டடம், பதிவுத்துறையின் சார்பில் 1.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மல்லசமுத்திரம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தத்தாதிரிபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 4 கூடுதல் வகுப்பறை கட்டடம் மற்றும் 1 அறிவியல் ஆய்வகக் கட்டடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தலா 15.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓ.சௌதாபுரம், கல்லாங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவ கட்டடங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 6.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேளாண்மை பொருட்கள் சேகரிப்பு மையம், அங்கன்வாடி மையம், உணவு தானிய கிடங்கு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க கட்டடம், மகளிர் சுய உதவி குழு கட்டடம், ஊராட்சி செயலர் அலுவலகம், துணை சுகாதார நிலைய கட்டடம், பேரூராட்சிகள் துறையின் சார்பில் 77.25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாண்டமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வகத்துடன் கூடிய வகுப்பறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் 32.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டடங்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கொல்லிமலை வட்டாரம், வாழவந்திநாடு ஊராட்சியில் 10.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதி அங்காடி கட்டடம் என மொத்தம் 11.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம், குழந்தைநேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், இலங்கைத் தமிழர் நலன் திட்டங்களின் கீழ் 57.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 111 பணிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்க மையம், புதிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் உள்ளிட்ட 2 பணிகளுக்கும், பேரூராட்சிகள் துறையின் சார்பில் 25.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், தார் சாலை, அறிவுசார் மைய கட்டடம் உள்ளிட்ட 25 பணிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம், கிராம அறிவுசார் மைய கட்டடம் ஆகிய 3 பணிகளுக்கும் என மொத்தம் 89.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 141 பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 45 மாற்றுத்திறனாளிகளுக்கு 35.38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், திறன்பேசி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், ஆவின் பாலகம் அமைக்க மானிய உதவித் தொகையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 1,691 பயனாளிகளுக்கு 23.94 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு வரன்முறை திட்டத்தில் நகர்புற வீட்டுமனை பட்டாக்கள், இ பட்டா, விலையில்லா வீட்டுமனை பட்டாக்களையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 2 பயனாளிகளுக்கு 9.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவியினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு 65.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆட்டோக்கள் வாங்குவதற்கான மானியம், வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்பு ஆணை மற்றும் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 119 பயனாளிகளுக்கு 11.77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா சலவைப்பெட்டி, விலையில்லா தையல் இயந்திரம், முஸ்லீம் முகளிர் உதவும் சங்கம் சார்பில் நலிந்தோர் நல உதவிகள், சீர்மரபினருக்கான நலவாரிய அடையாள அட்டை, கிறிஸ்துவ நல வாரிய அடையாள அட்டை, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 90 பயனாளிகளுக்கு 52.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளையும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு 31.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டாக்களையும், தாட்கோ துறையின் சார்பில் 45 பயனாளிகளுக்கு 54.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண் கண்ணாடி, பட்டப்படிப்பு, தொழில்நுட்ப படிப்பு, மேல்நிலை படிப்பு, திருமணம் உதவித் தொகை, சுமை வாகனம், சுற்றுலா வாகனம், கறவை மாடு வாங்க மானியம், இலவச துரித மின் இணைப்பு ஆகிய நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 69 பயனாளிகளுக்கு 32.26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும் என இவ்விழாவில் மொத்தம் 2,099 பயனாளிகளுக்கு 40.86 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வி.எஸ்.மாதேஸ்வரன், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கு.பொன்னுசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சு.வடிவேல், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம் பெருங்குடி – வடக்கன்குளம் கிராமத்தில்

# கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

*சென்னை, ஜூலை 11-*

*திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருங்குடி பகுதி-1 கிராமம், வடக்கன்குளம் குழந்தைகள் இல்லத்திலுள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி-முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*

*இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:*

*தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மாறாந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் - திருமதி. ராமலெட்சுமி தம்பதியரின் மகன் செல்வன். சேர்மதுரை (வயது 12) என்பவர் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருங்குடி பகுதி-1 கிராமம், வடக்கன் குளம் CMS குழந்தைகள் இல்லத்தில் தங்கி அருகிலுள்ள கன்கார்டியா மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு பயின்றுவந்த நிலையில் கடந்த 8.7.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் CMS குழந்தைகள் இல்ல வளாகத்தில் பயன்பாட்டில் உள்ள கிணற்றில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.*

*மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.*

### மண்–மொழி–மானம் காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர்கள் சேர்க்கை பணிகளுக்காக

# துறைமுகம் - எழும்பூர் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



மதுரை மாநகரில் ஜூன் 1 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக துறைமுகம், எழும்பூர் ஆகிய இரு தொகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (11.7.2025) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட இரு தொகுதிகளுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள்,தொகுதி பார்வையாளர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### முன்னாள் வட்டச் செயலாளர் – முன்னாள் மாமன்ற உறுப்பினர்

# 100 (அ) வட்டக் கழக மூத்த முன்னோடி சி.மாங்காளி (எ) மங்களதாஸ் மறைவு!

## நே.சிற்றரசு – எம்.கே.மோகன் – ச.பரமசிவம் – கார்த்திக் மோகன் – கு.பாபு அஞ்சலி!

*சென்னை, ஜூலை 11*

*சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, முன்னாள் வட்டக் கழகச் செயலாளர், முன்னாள் மாமன்ற உறுப்பினர், 100 (அ) வட்டக் கழக மூத்த முன்னோடியும், அண்ணா நகர் வடக்குப் பகுதி, மாவட்டக் கழகப் பிரதிநிதி இரா.வேல்முருகனின் மாமனார் சி.மாங்காளி (எ) மங்களதாஸ் (வயது 75) அவர்கள் நேற்று (10.07.2025 - வியாழக்கிழமை) மதியம் 12 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வே.கௌதமன், 100 (அ) வட்டக் கழகச் செயலாளர் கு.பாபு, 100 வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.ஏகாம்பரம், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், சமூக நலம் மற்றும் மகளீர் உரிமைத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் எல்.ரஜினி காந்த் மற்றும் மாநில, மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.*



*அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (11.07.2025 - வெள்ளிக்கிழமை) மதியம் 3 மணியளவில், எண். 71, 18 வது குறுக்கு தெரு, தா.பி.சத்திரம் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.*